මැතිවරණ කොමිෂන් සභාව
தேர்தல் ஆணைக்குழு
Election Commission
මැතිවරණ ලේකම් කාර්යාලය, නො.02 සරණ මාවත, රාජගිරිය, ශ්‍රී ලංකාව
தேர்தல்கள் செயலகம், இல.02 சரண மாவத்தை, இராஜகிரிய, இலங்கை
Elections Secretariat, No.02 Sarana Mawatha, Rajagiriya, Sri Lanka

මාධ්‍ය නිවේදනය
ஊடக அறிவித்தல்
MEDIA RELEASE

**ஊடக அறிவித்தல் இல:LAE/2025/81** — **2025.04.30**

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல் - 2025.05.06
## உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளின் விநியோக நடவடிக்கை முடிவடைதல் மற்றும் உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளைப் பெற்றுக்கொள்ளல் தொடர்பான அறிவித்தல்

உள்ளூர் அதிகார சபைகள் தேர்தலுக்கு ஏற்புடைய உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் வீடுகளுக்கு தபால் மூலம் விநியோகிக்கும் நடவடிக்கை 2025.04.29 ஆம் திகதி முடிவடைந்துள்ளது. உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் கிடைக்கப்பெறாத வாக்காளர்களுக்கு 2025 மே மாதம் 06 ஆம் திகதி வரை அலுவலக நேரத்திற்குள் அவர்களது தேருநர் இடாப்பில் பதிவுசெய்யப்பட்டுள்ள முகவரிக்கு ஏற்புடைய பிரதேசத்தின் தபால் அலுவலகத்திற்குச் சென்று தனது ஆளடையாளத்தை நிரூபித்து தனது வீட்டுக்குரிய உத்தியோகப்பூர்வ வாக்காளர் அட்டைகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் கிடைக்கப்பெறாத வாக்காளர்களுக்கு உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டையின் பிரதியொன்றை பின்வரும் படிமுறைகளைப் பின்பற்றி இணைய வழியில் பெற்றுக்கொள்வதற்கு தேர்தல் ஆணைக்குழுவினால் வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

https://eservices.elections.gov.lk இணைப்பின் ஊடாக தேர்தல் ஆணைக்குழுவின் இ சேவைக்குள் பிரவேசித்து “குடிமக்களுக்கு” எனும் இணைப்பில் “தேர்தல் நடவடிக்கைகளுக்கான தேருநர் பதிவு விபரம்” இ சேவையில் பிரவேசித்து தனது அடையாள அட்டை இலக்கத்தை உள்ளிட்டு I'm Not a Robot என்பதற்கு முன்னால் ☑ குறியீட்டை இட்டு “காட்சிப்படுத்து” எனும் பொத்தானை அழுத்துவதன் மூலம் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல் - 2025 க்கு ஏற்புடைய தேருநர் பதிவுத் தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

அதன் கீழுள்ள “கையடக்க தொலைபேசி இலக்கம்” எனும் இடத்தில் தங்களது கையடக்க தொலைபேசி இலக்கத்தை உள்ளிட்டு I'm Not a Robot என்பதற்கு முன்னால் ☑ குறியீட்டை இட்டு “வாக்குச்சீட்டு அச்சிடு” எனும் பொத்தானை உள்ளிடும் போது கிடைக்கும் திரையிலுள்ள “Enter the Code” எனும் இடத்தில் தங்களது கையடக்க தொலைபேசி இலக்கத்திற்கு கிடைக்கும் குறியீட்டை உள்ளிட்டு I'm Not a Robot என்பதற்கு முன்னால் ☑ குறியீட்டை இட்டு “Submit” பொத்தானை அழுத்துவதன் மூலம் உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டையை மிகவும் இலகுவாக தரவிறக்கம் செய்துகொள்ள முடியும்.

**ec.lk/vre** இணைப்பின் மூலம் அல்லது பின்வரும் QR குறியீட்டை ஸ்கேன் செய்வதன் மூலம் இந்த இ சேவைக்கு இலகுவாக பிரவேசிக்க முடியும்.

**அவ்வாறே, வாக்காளர்களுக்கு வாக்களிப்பதற்கு உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டை கட்டாயத் தேவைப்பாடு அல்ல. 2024 உள்ளூர் அதிகார சபைகள் தேருநர் இடாப்பில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள செல்லுபடியாகும் அடையாள அட்டையை வைத்திருக்கும் எந்தவொரு வாக்காளருக்கும் தனக்கென ஒதுக்கப்பட்டுள்ள வாக்களிப்பு நிலையத்திற்குச் சென்று ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவது போதுமானது என்பது இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.**

**சமன் ஸ்ரீ ரத்நாயக்க**
தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்